Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.453/2022

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-2<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| Father's Name | : | முருகன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 04.11.2025
எதிரி ஆஜரில்லை. எதிரிக்காக கு.விமு.ச பிரிவு 317 படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஓணக்கால் மேட்டில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் தாமோதரன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். கடந்த 26.03.2022 ம் தேதி காலை 7.30

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

மணியளவில் நானும் தாமோதரன் என்பவரும் சொந்தவேலையாக புகளூர் அரசுபெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள நீர்தேக்க தொட்டி வளாகத்தின் அருகே சென்று கொண்டிருந்த போது அப்போது அங்கு வந்த வேலாயுதம்பாளையம் போலீசார் XL இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதாக கூறி சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ– 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

காணாமல் போன வண்டியின் உரிமையாளர் யாருடையது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வாகனம் புகளூரில் கந்தம்பாளையத்தில் எனக்கு தெரிந்த ஒரு நபரின் வண்டி தான் காணாமல் போய்விட்டதாக சொன்னார். மேற்படி எனக்கு தெரிந்த நபர் வண்டி காணாமல் போனது பற்றி எனக்கு சொல்லவில்லை. நான் கையாப்பம் செய்த பேப்பரில் என் கையெழுத்திற்கு கீழ் நான் தேதி போடவில்லை. வரைபடம் மட்டும் தான் போலீசார் வரைந்தார்கள் வேறு எதுவும் போலீசார் எழுதவில்லை. தண்ணீர் நீர்தேக்கத்திற்கு வெளியில் தான் இருசக்கர வாகனத்தை நிறுத்தி தண்ணீர் பிடிப்பார்கள். வண்டி உரிமையாளர் நீர்தேக்க தொட்டியில் தண்ணீர் பாய்ச்சு வேலை செய்கிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும், வண்டி காணாமல் போன நபர் எனக்கு தெரிந்த நபர் எதிரியை பழி வாங்கு நோக்கி காவல் துறையினருடன் இணைந்து எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.